1987 மார்ச் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தனியாக அரசின் சார்பாக பழம் பதனிடும் ஆலை அமைக்கும் உத்தேசம் இல்லை. இப்பொழுது ஓரளவுக்கு இலாபத்திலே பணியாற்றி வருகிறது. அதன்மூலம் உற்பத்தியாகின்ற சாறு தமிழகத்தினுடைய பல்வேறு பண்டக சாலைகளுக்கு விநியோகிக்கப்படுகிறது என்பதோடு மட்டுமல்லாமல், பக்கத்து மாநிலங்களுக்கும் செல்லுகிற அளவுக்கும் இருந்து வருகிறது. அதை மேலும் வளர்ப்பதற்கும் விரிவாக்கம் செய்வதற்கும் வாய்ப்பு இருக்குமானால் அதற்கு உதவி செய்வதற்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக அரசு ஆய்வு செய்யும்.

சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு வீடுகள்.

104—(*வினா எண் 5397) —திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்குக் குடியிருப்பதற்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குக் கீழ்க்கண்ட மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன :

1. செனாய் நகர்ப் பகுதியில் 75 மனை அளவு கொண்ட பரப்பு.

2. தாம்பரம் அருகில் மாடம்பாக்கம் கிராமத்தில் தொழு நோய் மருத்துவமனை அமைப்பதற்கு சென்னை மாநகராட்சிக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 30.25 ஏக்கர் பரப்புடைய இடம்.

3. பல்லாவரம் அருகில் உள்ள பம்மல் கிராமத்தில் தங்கும் விடுதிகள் கட்டப்படுவதற்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 6.44 ஏக்கர் பரப்புடைய இடம்.

செனாய் நகர்ப்பகுதியில் உள்ள மனையில், அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதர இரண்டு இடங்களும் அன்பளிப்பாகப் பெற்றவையாகையால் அவற்றில் மாநகராட்சி அலுவலர்களுக்கு என வீடுகள் கட்டுவதில் சட்டப் பிரச்னைகள் உள்ளன. எனவே

தக்க சட்ட ஆலோசனைகள் பெறுதல், கட்டடம் கட்ட செயல் வடிவங்கள் தீட்டுவது, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திடம் அனுமதி பெறுவது, அரசின் ஒப்புதல் பெறுவது மற்றும் தேவையான நிதி உதவி பெறுவது முதலிய நடவடிக்கைகளும் தற்போது சென்னை மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகின்றன

(முற்பகல் 10-20)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநகராட்சி கட்டுகின்ற குடியிருப்பு களில் எந்தெந்தப் பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது? அந்தத் திட்டப் பணி நடப்பு நிதியாண்டில் துவங்கப் படுமா என்பதையும், அதற்கென திட்டமிடப்பட்டுள்ள தொகை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, கொள்கை ரீதியில் அவர்களுக்கு வீடு கட்ட அரசு முடிவு எடுத்து அந்தக் காரியங்களைச் செய்கிறது. மற்றவை எல்லாம் தொடர்ந்து செய்யப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாநகராட்ச்சிக்கு சொந்தமான இடங்களில் குடிசைப்பகுதி மாற்று வாரியம் வீடுகளைக் கட்டும்போது அதிலே ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாநகராட்சியால் குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு முறையீடு செய்யப்பட்டுள்ளதா? அப்படி முறையீடு உள்ளது என்று சொன் னால் சைதாப்பேட்டையில் உள்ள டோபிக்கானா பகுதியை குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்களா? அப்படிக் கேட்டிருந்தால் அந்த இடத்திலும் மாநகராட்சித் தொழிலாளர்களுக்கு வீடுகள் ஒதுக் டு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அதுபற்றி என்னிடத்திலே இப் போது தகவல் இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசுக்கு என்று கட்டப்பட்ட குடியிருப்புகளில், மாநகராட்சி, நகராட்சிக்குச் சொந்தமான குடியிருப்புகளில், தனியார்களைக் குடியமர்த்தி அவை வாட கைக்கு விடப்பட்டு பல ஆண்டுகளாகவே அவர்கள் வசம் அந்த குடியிருப்புகள் உள்ளன. அப்படிப்பட்டவர்களை அகற்றி அந்த வீடுகளை, அந்தந்த மாநகராட்சி, நகராட்சி அல்லது அரசுப் பணியாளர்களுக்கு ஒதுக்கிடுவதற்கு அரசு முன்வருமா?

2987 மார்ச் 11]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் விவரம் இல்லை. தக்க அதிகாரிகளிடத்திலே விவரம் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினரிடத்திலே ஏதாவது தகவல் இருக்குமானால் அரசிடம் கொடுத்தால்நலமாக இருக்கும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி ஊழியர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு ஏதேனும் வரம்பு அடிப்படை வைத்திருக்கிறார்களா? காலப்போக்கில் இந்தத் திட்டத்தை மற்ற மாநகராட்சிகளுக்கும் விரிவு படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே இதற்கு நான் ஒரு கருத்தைச் சொன்னேன். கொள்கை அளவில்தான் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவை எல்லாம் ஆராயப் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னால் அவையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள தொழில் தகராறுகள் நீதிமன்றம்.

105—(*வினா எண். 6202)— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ)) சென்னையிலுள்ள இன்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனல் கோர்ட்டில் நீதிபதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) எவ்வளவு காலமாக நீதிபதி நியமிக்கப்படவில்லை?

(இ) அந்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நீதிபதி ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஆ) 1–4–1985 முதல் 30–6–1985 வரை மற்றும் 22–8–1985 முதல் 27–1–1986 வரை இப்பதவி பூர்த்தி செய்யப் படாமல் இருந்தது.